**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.113/2023
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : பூப்பாண்டி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2023.

07.08.2023

(1ம் எதிரி ஆஜர், 2, 3, 4ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆடு மேய்த்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். எனது தந்தை சித்திரைவேலு மற்றும் 1ம் எதிரி அர்ஜீனனின் தந்தை அரியப்பன் ஆகிய இரண்டுபேரும் 20 செண்ட் இடத்தை கூட்டாக வாங்கியிருந்தார்கள். அதனால் எனது அப்பா பெயரிலும், 1ம் எதிரி தந்தையின் பேரிலும் கூட்டுபட்டா உள்ளது.

2) இந்நிலையில் கடந்த 07.02.2023ம் தேதி இரவு 09.00 மணியளவில் 1ம் எதிரி அர்ஜீனன் எனது வீட்டிற்கு முன்னால் வந்து நின்றுகொண்டு எனது பெயருக்கு தானே பட்டா வந்திருக்க வேண்டும் எப்படி உன் தந்தை பெயரிலும் பட்டா வந்தது என்று பேசிக்கொண்டிருந்தார். நான் எது வேண்டுமானாலும் உனது தந்தையிடம் பேசிக்கொள் என்று 1ம் எதிரியை பார்த்துக்கூறினேன். அப்போது 1ம் எதிரியின் மகன் இளஞ்சிறார் தினேஷ் கத்திக்கம்பால் எனது இடதுபக்க கண் அருகே வெட்டிக்காயம் எற்படுத்தினார். அதில் எனக்கு 3 தையல்கள் போடப்பட்டது.

3) நான் கீழே விழுந்தவுடன் 1ம் எதிரி வலது கால் பாதத்திற்கு மேல் அருவாமனையை வைத்து வெட்டிவிட்டார். அதில் எனக்கு 2 தையல் போடப்பட்டது. 2ம் எதிரி பழனி கல்லை எடுத்து எனது வலது காலில் எறிந்தார். அப்போது 3ம் எதிரி சேதுபாண்டி என்னை பிடித்து வைத்துக்கொள்ள 3ம் எதிரியின் மனைவி 4ம் எதிரி செல்வி கம்பியால் எனது தலையில் அடித்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு இரத்தம் வந்ததை பார்த்து எதிரிகள் ஓடிவிட்டார்கள். அதற்குள் கார்த்திக், லெட்சுமியும் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள்.

4) முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பினார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு போலிசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கி சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.113/2023
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : கார்த்திக் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2023.

07.08.2023

(1ம் எதிரி ஆஜர், 2, 3, 4ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆடு மேய்த்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். அசா.1 பூப்பாண்டி எனது பெரியம்மா மகன் ஆவார். 07.02.2023ம் தேதி இரவு 09.30 மணியளவில் நான், அசா.1, எனது பெரியம்மா பூரணம் ஆகியோர் வாசலில் உட்கார்ந்துகொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த ஆஜர் 1ம் எதிரி, அசா.1யை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசி வீட்டை விட்டு வெளியே வா என்று கூறி பத்திரத்தை கேட்டார். அசா.1 உனது அப்பாவிடம் கேட்டுக்கொள் என்று 1ம் எதிரியிடம் கூறினார்.

2) 1ம் எதிரியின் மகன் இளஞ்சிறார் தினேஷ் கத்திக்கம்பை வைத்து அசா.1ன் கை மற்றும் கண் புருவத்தில் வெட்டிவிட்டார். உடனே அசா.1 கீழே விழுந்துவிட்டார். அசா.1யை 1ம் எதிரி அருவாமனையால் காலில் வெட்டிவிட்டார். 2ம் எதிரி பழனி கம்பை வைத்து அசா.1ன் காலில் அடித்தார். 3ம் எதிரி சேதுபாண்டி அசா.1யை பிடித்துக்கொள்ள 4ம் எதிரி செல்வி கம்பியை வைத்து அசா.1ன் தலையில் அடித்தார். உடனே அசா.1 மயங்கி விழுந்துவிட்டார். உடனே 108 ஆம்புலன்ஸ் மூலமாக

முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் அசா.1 யை சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.113/2023
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : லெட்சுமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2023.

07.08.2023

(1ம் எதிரி ஆஜர், 2, 3, 4ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். 07.02.2023ம் தேதி இரவு 09.30 மணியளவில் சத்தம் கேட்டு அசா.1 பூப்பாண்டி வீட்டிற்கு வந்து பார்த்தபோது 1ம் எதிரி அர்ஜீனன் மற்றும் அவரது மகன் இளஞ்சிறார் தினேஷ் கையில் அருவாள் மற்றும் கத்திகம்பு வைத்துக்கொண்டு நின்றிருந்தார்கள். 4ம் எதிரி செல்வி கையில் கம்புடன் நின்றுகொண்டிருந்தார். வேறு யாரு இருந்தார்கள் என்று எனக்கு இருட்டில் சரியாக தெரியவில்லை. நான் வந்து பார்த்தபோது அசா.1 கீழே விழுந்து இரத்தக்காயத்துடன் எழுந்து நிற்க முடியாத நிலையில் இருந்தார்.

2) 108 ஆம்புலன்ஸ்யை வரவழைத்து நான் அசா.1யை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.